2019 ஜூலை 19]

திறக்கப்பட்டு, 18 இலட்சத்து 25 ஆயிரம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. 4 இலட்சத்து 78 ஆயிரம் விவசாயிகள் பயன்பெற்றிருக்கிறார்கள். அவர்களுக்கு ECS மூலமாக 3200 கோடி ரூபாய் பணப் பரிவர்த்தனை செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்னும் சில ஊர்களைச் சொல்லி, அந்த ஊர்களிலும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைத் திறப்பதற்கு வாய்ப்பு இருந்தால் திறக்க வேண்டுமென்று இங்கே கோரிக்கை வைத்தார்கள். அவையெல்லாம் ஆய்வு செய்யப்பட்டு, அதன் அடிப்படையிலே நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உரக் கிடங்கு அமைப்பதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். உரக் கிடங்கு அமைப்பதைப் பொறுத்தவரையில், கூட்டுறவுத் துறையின்மூலம் ஆங்காங்கே கிடங்குகள் அமைக்கப்படுகிற பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களிடத்திலே கலந்து பேசி அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 146, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

146—

கால்நடை மருத்துவமனை

***571—திரு. கு. பிச்சாண்டி:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றியம், இனாம்காரியந்தல் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பெண்ணாத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட துரிஞ்சாபுரம் ஒன்றியம், இனாம்காரியந்தல் கிராமத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கால்நடை மருத்துவமனை அமைக்க கோரிக்கை விடுத்துள்ளார்கள். அரசின் கொள்கைப்படி, நேரடியாக கால்நடை மருத்துவமனை அமைக்க இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரு கிராமத்தில் 3,000-க்கும்மேல் கால்நடை அலகுகள் இருந்தால் அங்கு கால்நடை கிளை நிலையமும், 5,000-க்கும்மேல் கால்நடை அலகுகள் இருந்தால் அங்கு கால்நடை மருந்தகமாகவும், பின்பு தினந்தோறும் சிகிச்சை மற்றும் இதர சேவைகளைப் பெறுவதற்கு வரும் கால்நடைகளின் எண்ணிக்கை 40-க்கும்மேல் இருக்கும்பட்சத்தில் கால்நடை மருத்துவமனையாகவும் தரம் உயர்த்த இயலும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை-வேலூர் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள்தான் தமிழகத்திலேயே இரண்டாவதாக அதிக அளவு பால் உற்பத்தி செய்யக்கூடியவர்கள். அதிக அளவு கால்நடைகள் இருக்கின்ற பகுதியாக இருக்கின்ற துரிஞ்சாபுரம் ஒன்றியத்திலே, இனாம்காரியந்தல் கிராமத்திலே இடம் இருக்கின்றது. ஆகவே, அங்கு அதிக அளவில் கால்நடைகள் இருப்பதால் அங்கே ஒரு கால்நடை மருத்துவமனையோ அல்லது பாலானந்தல் கிராமத்திலே ஒரு கால்நடை மருத்துவமனையோ அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோயம்புத்தூர் அருகில், ஒரு கால்நடை மருத்துவமனையில் பாம்பு ஒன்றுக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது என்ற ஒரு செய்தியை அண்மையில் நான் படித்தேன். அது நல்ல பாம்பா, சாரைப் பாம்பா? அந்தப் பாம்பு உயிருடன் இருக்கிறதா என்பது அரசுக்குத் தெரியுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன். (சிரிப்பு)

2019 ஜுலை 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இனாம்காரியந்தல் மற்றும் அருகிலுள்ள சத்திரம், வெங்காயவேடு, சீலப்பந்தல், துர்க்கைநம்மியந்தல் மற்றும் கொளக்கரைவாடி ஆகிய கிராமங்களில் சுமார் 4,500 கால்நடை அலகுகள் உள்ளதால் அங்கு கால்நடை கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளன. ஆகையால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய இனாம்காரியந்தல் கிராமத்தில் புதிய கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசின் கொள்கை முடிவுக்குட்பட்டு, கேட்டதையெல்லாம் கொடுத்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு உறுப்பினர் பாம்பைப் பற்றி கேட்டிருக்கின்றார்கள். பாம்புக்கும் வைத்தியம் பார்க்கப்படும்; அதேபோல் கால்நடைகளாக இருக்கின்ற அனைத்துப் பிராணிகளுக்கும் வைத்தியம் பார்க்கின்ற வகையிலே இன்றைக்கு இந்தியாவிலேயே தமிழக கால்நடைத் துறை முதன்மை இடத்தில் இருந்துகொண்டிருக்கின்றது என்பதை முதலிலே தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) பாம்பின் நிலை பற்றி அதிகாரிகளைக் கேட்டறிந்து அதன் பிறகு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தகவல் தெரிவிக்கின்றேன். மேலும், பாம்பினுடைய அறுவை சிகிச்சை பற்றியெல்லாம் பேசுகின்ற மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் ஏதாவது பாம்பு வைத்திருக்கிறாரா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன். (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.*

திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் சார்பாக சென்னை, நாமக்கல், திருநெல்வேலி, ஒரத்தநாடு ஆகிய இடங்களில்தான் கால்நடை மருத்துவக் கல்லூரிகள் இருக்கின்றன. அந்தக் கல்லூரிகளில் மொத்தமே 460 இடங்கள்தான் உள்ளன. ஆனால், இந்த ஆண்டு 15,666 பேர் மனு செய்திருக்கிறார்கள்.*

ஆகவே, இந்தப் படிப்பு படிப்பதற்கு அதிக அளவில் மாணவர்கள் ஆர்வமாக இருக்கின்ற காரணத்தால் கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகத்தின்கீழ் நடைபெறும் கால்நடை மருத்துவக் கல்லூரிகளில், இப்போது NEET தேர்வால் நம்முடைய மாணவர்களுக்கு மருத்துவப் படிப்பில் இடம் கிடைக்காத நிலை மாறி, கால்நடை மருத்துவர்களாக வருகின்ற வகையிலே, திருவண்ணாமலை மாவட்டத்திற்கு ஒரு கால்நடை மருத்துவக் கல்லூரியை இந்த அரசு வழங்குமா? இத்தனை மாணவர்கள் மனு செய்து காத்திருக்கின்ற காரணத்தால் இதைக் கவனத்திலே கொண்டு, தமிழகத்திலே பல கால்நடை மருத்துவக் கல்லூரிகளில், (NEET தேர்வு இல்லாமல்) இவர்கள் சேர்க்கப்படுகின்ற காரணத்தால் கால்நடை மருத்துவக் கல்லூரிகளை அரசு ஆரம்பிக்குமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை மருத்துவக் கல்லூரிகளுடைய எண்ணிக்கையைப் பற்றியும், அங்கே குறைவான எண்ணிக்கையிலே seats இருப்பதாகவும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். இன்றைக்கு கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகத்தை பொறுத்தவரை, தமிழகத்திலே 4 கல்லூரிகள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுதான் கடந்த 2015-2016 ஆம் ஆண்டுகளிலே ஒரத்தநாட்டிலும், திருநெல்வேலியிலும் கால்நடை மருத்துவக் கல்லூரிகளைத் துவக்கியது. அந்தக் கல்லூரிகளைத் துவக்குகின்றபோது மாணவர்களின் சேர்க்கை 40 என்ற எண்ணிக்கையிலே இருந்தது. கடந்த ஆண்டு 80 ஆக அது உயர்த்தப்பட்டிருக்கின்றது. ஒவ்வோர் ஆண்டும் கால்நடை மருத்துவக் கல்லூரிகளில் சேர்பவர்களுடைய எண்ணிக்கை அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, எங்கு தேவைப்படுமோ, அங்கு அமைப்பது பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்து பேசி, கால்நடை மருத்துவக் கல்லூரி அமைப்பதற்குத் தேவையான விதிமுறைகளெல்லாம் பூர்த்தியாகிறபட்சத்தில் அமைக்கப்படும். திருவண்ணாமலை*

2019 ஜூலை 19]

மாவட்டத்திலே கால்நடை மருத்துவக் கல்லூரி வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். அதற்குத் தேவையான நிலங்கள், அதேபோல பல்வேறு கருத்துகளை கடந்த முறை நான் சொல்லியிருக்கின்றேன். ஆகவே, கால்நடை மருத்துவக் கல்லூரி அமைப்பதற்குத் தேவையான நிலங்கள், ஆராய்ச்சி மையங்கள் போன்றவை இருக்க வேண்டும். அதுபோன்ற கட்டமைப்புகள் ஏற்படுத்துவதற்குண்டான வசதிகள் திருவண்ணாமலை மாவட்டத்தில் இருக்குமென்றால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பார்வைக்குக் கொண்டு சென்று பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 147, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பழனி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

147—

மருத்துவமனையை விரிவுபடுத்துதல்

***26540—திரு. கே. பழனி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, அறிஞர் அண்ணா பொது மருத்துவமனையை விரிவுபடுத்தி மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் அரசு மருத்துவமனை 53 படுக்கை வசதிகளோடு, நாளொன்றுக்கு 800 புறநோயாளிகள், 50 உள்நோயாளிகள், மாதத்திற்கு 10 பிரசவங்கள் என சிறப்பாக நடைபெறுகிறது. அனைத்துப் பிரிவுகளுமே அங்கிருக்கின்றன. மருத்துவர்கள், செவிலியர்களெல்லாம் எந்தப் பற்றாக்குறையும் இல்லாமல் இருக்கிறார்கள். மேற்கொண்டு என்ன வசதிகள் தேவையோ, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மேலும் என்ன வசதிகளை கேட்கிறார்களோ அதை அரசு செய்து கொடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.